1969 மார்ச் 8]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) 298 தீர்மானங்கள் போடப்பட்டன.

(இ) 265 தீர்மானங்கள் முடிவாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊராட்சி ஒன்றியங்களில் போடப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவா என்பதை அறியவும், நாட்டின் முன்னேற்றம் கருதியும், சமுதாய மேம்பாட்டுப் பணிகள் குறித்து அரசுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஊராட்சி ஒன்றியம் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்ற கருத்தை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்த வகையில் ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பீரியாடிகல் ரிப்போர்ட் என்ற முறையில் அவ்வப்போது அனுப்பப்படுகிறது. அரசாங்கத்திற்கும் முறையாக வந்து கொண்டுதான் இருக்கிறது.

பொய்யூர்-சுண்டக்குடி சாலை

* 245 வினு—**திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டம் பொய்யூரிலிருந்து ஒட்டக்கோயில், ஆண்டிப்பட்டாக்காடு, சுண்டக்குடி வரை செல்லும் சாலையை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : பன்னிரண்டு மைல் நீளமுள்ள பொய்யூர்-சுண்டக்குடி சாலையை நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம் : (1) திருச்சி-சிதம்பரம் சாலை, (2) மேலக்கருப்பூர்-ஏலக்குறிச்சி சாலை (சின்னப்பட்டாக்காடு வரை) (3) சின்னப்பட்டாக்காடு-உறையூர் சாலை (4) அம்பலவர் கட்டளை-காமரச வல்லிசாலை (சுண்டக்குடி வரை).

இதில் சின்னப்பட்டாக்காடு—உறையூர் சாலையைப் பொறுத்தவரையில் ஒரு திட்டமும் இல்லை.

Fire accident at Gandhi Market, Tiruchirappalli.

* 226 *Q.*—Dr. H. V. HANDE :
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :
Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that a fire accident took place at Gandhi Market, Tiruchirappalli, destroying nearly 300 thatched huts on 3rd June 1968;

(*b*) if so, the details thereof;

(*c*) the total extent of damage that took place and

(*d*) the relief measures undertaken by the Government?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள, காந்தி அங்காடியில் 3—6—1968 அன்று தீ விபத்து ஏற்பட்டது. இதனால், காய்கறிகள், பழவகைகள், தேங்காய்கள் போன்ற தரகு மண்டிகள் அடங்கிய 153 கடைகள் எரிந்து போயின.

(இ) தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் நாசமடையவில்லை. காந்தி அங்காடியில் இடிபாடுகளை அகற்றும்போது சவம் ஒன்று தக்காளிப்பழக் கடையில் கண்டெடுக்கப்பட்டது.